# வடக்கில் பாரிய தாக்குதலுக்கு கிழக்கிலிருந்து ராணுவம் நகர்வு


விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 07 இதழ் 137

யாழ்ப்பாணம் புதன்கிழமை 21 – 6 – 1995


(கொழும்பு)

வடக்கில் பாரிய தாக்குதலை நடாத்துவதற்கு, இராணுவம் கிழக்கிலிருந்து படையணிகளை வடக்கு நோக்கி நகர்த்திவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் படையினருக்கு எவ்வளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளபோதிலும்; அங்கிருந்து எப்படியாவது புலிகளை வடக்கிற்கு அனுப்புவதுடன், வடக்கு நோக்கிப்

(6ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படையில் புதிதாக 5000 முஸ்லிம்கள் நியமனம்

(கொழும்பு)

கிழக்கில் காத்தான்குடியில் 5000 முஸ்லிம் கிராமவாசிகள் ஊர்காவல் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு பகுதிபகுதியாக 'விழிப்புக் குழுக்களாக' நியமிக்கப்பட்டு வருகின்ற

[6ம் பக்கம் பார்க்க]

## விமானநிலையத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு!

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம் உட்பட நாடு முழுவதிலும் உள்ள ஏனைய பொது இடங்களிலும் பூரண பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு

(6-ம் பக்கம் பார்க்க)

# ஒரே நேரத்தில் வவுனியா, முல்லை, ஆனையிறவில் பாரிய தாக்குதலுக்கு திட்டம்!

(கொழும்பு)

ஒரே நேரத்தில் ஆனையிறவு, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மும்முனைகளினூடாக இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிட்டிருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் திட்டம் ஒன்று ஐ. தே. க. வின் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தால் திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டு இந் நடவடிக்கைகளை தொடர பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதுபற்றி வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற உயர் பாதுகாப்பு மாநாட்டிலும் ஆராயப்பட்டது.

## திருமலையில் மீண்டும் வெள்ளை வான் ரோந்து

(திருமலை)

திருமலை நகரில் மீண்டும் வெள்ளை வான் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வானைக் கண்டதும் இப்பகுதிமக்கள் பெரும் பதற்றமடைகிறார்கள்.

வெள்ளை வானில் வருபவர்கள் தமது விருப்பப்படி எவரையும் கைது செய்ய

(6ம் பக்கம் பார்க்க)

## வன்னி ராணுவ திட்டங்கள் குறித்து ரத்வத்த தலைமையில் உயர் மாநாடு!

(கொழும்பு)

வவுனியாவில் இராணுவ அதிகாரிகள், இராணுவத் தளபதிகளை உள்ளடக்கிய பாதுகாப்பு மாநாடு ஒன்றை பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த அண்மையில் கூட்டியிருந்தார்.

இம்மாநாட்டில் வடபகுதியில் வன்னி பெருநிலப்பரப்பில் இராணுவத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்த திட்டங்களை பிரதி பாதுகாப்பு அமைச்சர் இராணுவ

(2ம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலிப் பகுதி மீண்டும் வழமைக்குத் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் கடந்த 16-ம் திகதி இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்ட அப்பகுதிகள் மீண்டும் கடந்த இருநாட்களாக வழமைக்கு திரும்பியுள்ளது.

மக்கள் படிப்படியாக தமது இருப்பிடங்களுக்குச் சென்று வழமைபோல இயங்க ஆரம்பித்துள்ளனர். சில இடங்களில் மக்கள் இரவிலும் தங்க ஆரம்பித்துள்ளனர்.

தற்போது அங்கு மக்கள் நடமாட்டத்தை அடுத்து அச்சுவேலி கிராமிய வைத்

(6ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வெளிநாட்டு தூதரகம் ஒன்றின் முக்கிய பிரிவு மூடப்பட்டது

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகம் ஒன்று தனது முக்கிய பிரிவொன்றை கொழும்பில் மூடியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள போர்க்கால சூழ்நிலையிலும் எல்லாளன் படையின் அச்சுறுத்தலாலும் இந்த வெளிநாட்டு தூதரகம் தனது முக்கிய பிரிவை மூடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த தகவலை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இலங்கை வெளிநாட்டு தூதரகம் மறுத்து

(2ம் பக்கம் பார்க்க)

## ஊர்வலம் நடத்திய ஐ. தே. க. உறுப்பினர்கைது

(கொழும்பு)

திம்புலாகல தேரரின் கொலைக்கு எதிராக கடந்த 3ம் திகதி ஊர்வலம் நடாத்திய ஐ.தே.க அரசியல் வாதிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திம்புலாகல தேரரின் கொலைக்கு காரணமானவர்களை கண்டு பிடிக்க அரசு தவறிவிட்டதாக கூறியே இந்த ஐ.தே.க. அரசியல் வாதிகள்

[2-ம் பக்கம் பார்க்க]

## மோசடியை தடுக்க புதிய கடவுச்சீட்டு

(கொழும்பு)

உலகத்தில் காணப்படும் அதிநவீனதொழில்நுட்பத்தை பயன்படுத்தி கொம்பியூற்றர் அச்சில் தயாரிக்கப்படும் கடவுச் சீட்டுக்கள் இலங்கையில் விரைவில் வழங்கப்படவுள்ளன.

கடவுச் சீட்டுக்களை மாற்றியமைக்கும் பேர்வழிகளின் செயலை முறியடிக்கும் வகையில், பாதுகாப்பு அச்சு வேலைகளை செய்யும் பிரிட்டன் கம்பனி ஒன்றிடம் இவ்வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிய கடவுச் சீட்டில், தற்போது படம் ஒட்டுவது

(2ம் பக்கம் பார்க்க)

## ஆயுதபாணிகளால் கொழும்பில் வான் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பு காலி வீதியில் சென்று கொண்டிருந்த வான் ஒன்று ஆயுதமேந்திய இருவரால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் தெகிவளையில் இச்சம்பவம் நடந்திருக்கிறது.

சாரதியை துப்பாக்கியுடன் வந்த இருவர் கீழே இறக்கிவிட்டு வானைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள்.

## சமாதானம் அழிந்துபோவதற்கு சிங்கள இனவாதிகளே காரணம்

(லண்டன்)

''இலங்கையிலே சமாதானம் அழிந்து போவதற்கு இலங்கையை ஆட்சி செய்து வந்த சிங்கள இனவாத அரசியல் வாதிகளே முக்கிய காரணம்''

இவ்வாறு ஜனநாயகத்துடனான சமாதான இயக்கத்தின் தலைவர் திரு. எஸ். மனோரஞ்சன் நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்- அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் சமாதானம் ஏற்படும் முகமாக எமது இயக்கத்தின் முதல் முயற்சி சிங்கள மக்களிடையே ஆரம்பிக்கப்பட்டது. ஏனென்றால் இலங்கையில் சமாதானம் அழிந்து போவதற்கு சிங்கள இனவாத அரசியல் வாதிகளே காரணமாய் இருக்கின்

(2ம் பக்க தொடர்சி)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

### ஊர்வலம்

(ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் நடாத்தியுள்ளனராம்.

இதேவேளை இப்பகுதிளம்.பியான திரு. திலக் கருணரத்னவையும் விசாரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்கான அனுமதியை உயர் மட்டத்தில் பொலிஸார் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

### மோசடியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போலன்றி, படத்தையே கொம்பியூற்றர் மூலம் அச்சடிப்பதோடு கடவுச்சீட்டுஇலக்கமும் அந்தப்படத்தில் அச்சடிக்கப்படும். இன்னும் கண்ணுக்கு புலப்படாத வகையில் சில தகவல்களும் அதிலடங்கியிருக்கும், பாதுகாப்பு கருதி அவை வெளியிடப்படமாட்டா.

இதையும் மாற்றியமைக்கும் வல்லமையுடையோர் செயற்பாடு வருமாயின் இனி மேல் நூறு வருடமானாலும் புதிய முறையொன்றைக் கண்டுபிடிக்க இயலாது என திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளே தற்போது இவ்வித நவீன கடவுச்சீட்டுக்களை பயன்படுத்துகின்றன. -கே-சி

# பிறப்புச்சான்றிதழ் வழங்கல் யாழ். செயலகத்தில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்தில் ஜெனரேற்றர் மூலம் வழங்கப்பட்டு வந்த மின் விநியோகம் தற்பொழுது மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனரேற்றருக்கான எரிபொருளுக்குச் செயலகத்தில் தட்டுப்பாடு நிலவுவதால் இந்த ஜெனரேற்றர் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் பாவிக்கப்பட்டு வருகிறது.

மின் விநியோகம மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து செயலகப் பதிவாளர் திணைக்களத்தால் போட்டோப் பிரதிகள் மூலம் வழங்கப்பட்டு வந்த பிறப்புச்சான்றிதழ்கள் வழங்குவதும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. 162-கி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**21-06-1995**

புதன் இரவு

8-02 குயிலோசை நிகழ்ச்சியில் ந கோகுலன் எழுதிய 'மரபுவழி இசை நாடகப் பாடல்கள்' கிராமிய நிகழ்வு
8-20 வாத்திய கானங்கள்
8-30 செய்திகள்
8-40 நாடகம் தமிழ்க்கவி எழுதிய 'நாங்கள் விட்ட பிழை'

**22-06-1995**

வியாழன்காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலை கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7.45 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**21-06-1995**

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5 10 புதியவை
5-15 படப்பாடல்
5-30 அறிவூற்று
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
6-02 உங்கள் தெரிவ
6-15 விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து மீண்டும் உங்கள் தெரிவு
6-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### விநியோகம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வடக்கு, வட்டுக்கோட்டை கிழக்குப் பிரிவு கடற்றொழிலாளர் சங்கத்தினர் தமது சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 2 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் வழங்கி வருகின்றனர். (139)

### சமாதானம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றார்கள்.

சமாதானத்தை வலியுறுத்தி தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களை ஆயிரக்கணக்கில் ஒன்று திரட்டி இலங்கையின் பல மாவட்டங்களில் சமாதான ஊர்வலங்களையும். பேரணிகளையும் நடாத்தியுள்ளோம். சமாதானத்தை வலியுறுத்தி கிட்டத்தட்ட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் அட்டைகளை ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் எமது இயக்கத்தினூடாக அனுப்பியுமுள்ளோம.

இலங்கை பூராவிலும் பெரும்பாலான மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். அரசதரப்பிலும் சில அரசியல்வாதிகள் சமாதானத்தை விரும்புகின்றார்கள் ஆனால் அரச நிர்வாகத்திலுள்ளசிலரும், ராணுவத்தினரும் சமாதான முயற்சிகளுக்குத் தடைபோட்ட வண்ணமே இருக்கின்றார்கள் என்று கூறினார். வி-ரி

# தனியார் ஊழியர்களிடமும் பாதுகாப்பு நிதி பெற முடிவு

(கொழும்பு)

வடக்குகிழக்கு யுத்தத்தை தொடர்ந்து மேற்கொள்வவதற்கு அரசாங்க, தனியார் ஊழியர்களிடமிருந்து ஒரு நாள் சம்பளத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று 'ஹிரு' பத்திகைரி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கம் மேற்படி யோசனையை தெரிவித்ததாக 'ஹிரு' மேலும் தெரிவித்துள்ளது. ம-கி

# 3,363மீனவகுடும்பங்களுக்கு இலவச நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 3,363 மீனவ குடும்பங்களுக்கு இலவச மீனவ நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொண்டுவருகின்றது.

யாழ். பிரதேச செயலர் பிரிவில கரையோர பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீனவ குடும்பங்களுக்கே இந்நிவாரணம் வழங்கப்படும்.

மீனவ நிவாரணம் வழங்குவதற்கான முன்னேடி ஏற்பாடுகளை கிராம சேவையாளர்கள் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். 170-சி

# மருந்து தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது.

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச சுகாதார சேவைகள் பிரிவு வைத்தியசாலையில் கடந்த சில காலமாக நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடுகள் தற்போது ஓரளவு நீங்கியுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த வாரம் கப்பலில் தாமதித்து அனுப்பிவைக்கப்பட்ட இந்த வருடத்திற்கான இரண்டாவது காலாண்டுக்குரிய மருந்து வகைகள் உடனடியாகவே பிரதேச சுகாதார சேவைகள் பிரிவு பணிமனையினால் பிரிவு வைத்தியசாலைகள் அனைத்திற்கும் தாமதமின்றி லொறிமூலம் விநியோக்கிகப்படவுள்ளது. 90-சி

## க.பொ.த. (உ/த) பாடத் திட்டத்தை மாற்ற அரசு தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர பத்திர உயர் தரத்திற்கான பாடத்திட்டத்தை மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதன் பொருட்டு உத்தேச பாடத்திட்டம்ஒன்று தற்பாதுரிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் இந்த உத்தேச பாடத் திட்டத்தை கல்விமான்கள் தற்போது பார்வையிட முடியும்.

கடந்த16 வருடங்களின்பின் உயர் கல்விப் பாடத் திட்டத்தில் தற்பொழுது மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது,

தொழில் வாய்ப்புக்கு உதவக்கூடிய வகையிலும், இன்றைய தேவைக்கு ஏற்றவகையிலும் புதிய கல்வித் திட்டம் அமையவிருக்கின்றது. -கி-சி

## உல்லாச பயணிகளை மீண்டும் வரவழைக்க அரசு பிரசாரம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலும், கேந்திர முக்கிய நிலையங்களிலும் குண்டுகளை வெடிக்க வைக்கப் போவதாக 'எல்லாளன்' படை விடுத்துள்ள எச்சரிக்கையினால் உல்லாச பயணிகள் வருகையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கான பிரசாரங்களை அரசு ஆரம்பித்துள்ளது.

இதன் பொருட்டு இரண்டு பக்க பிரசுரமொன்றை அரசு வெளியிட்டுள்ளது.

'உல்லாசப் பயணிகளே இலங்கையின்இயற்கைஅழகை ரசிப்பதற்கு தடையேதும் இல்லை பயங்கரவாதத் தாக்குதல் நடக்குமென நீங்கள் அஞ்சத் தேவையில்லை. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் அழகை ரசிக்க இன்றே உங்கள் பயணத்தை ஆரம்பியுங்கள் என குறிப்பிடும் இப்பிரசுரங்கள் வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. -கி-சி

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வெளிநாட்டு, தூதரகத்தில் அந்தப்பிரிவு நீண்டகாலமாக இயங்கி வந்ததாகவும் அது தற்போதைய மோசமான சூழ்நிலை காரணமாகவே மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு படுகிறது.

இதேவேளை இந்தப் பிரிவை அந்த நாடும் திருப்பி அழைத்துள்ளதாகவும் இது இலங்கைக்கு பெரும் நெருக்கடியாகஅமைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. சி-ரி

### வன்னி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளிடம் வழங்கி ஆலோசனைகள் நடத்தியிருப்பதாக தெரிய வருகிறது.

பிரதி பாதுகாப்பு அமைச்சருடன் இராணுவ தளபதி ஜெரிடீ சில்வா, இராணுவ அலுவலக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்ணன்டோ, நடவடிக்கை கட்டளை அதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்த்தன, படைகளின் துணை புலனாய்வு ஆணையாளர் கேணல் கே. யூ. டி. மகிந்தானந்த ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.


வன்னிப்பிராந்தியம் மற்றும் அண்மித்த பகுதிகளில் படையினர் எதிர் கொள்ளும் இராணுவ நிலமைகள் குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. ரி

உ

சிவமயம்

# எமது வாழ்த்துக்கள்

கொழும்புத்துறை நெடுங்குளம் அம்பலவாணர் விநாயகர் ஆலய உற்சவ காலங்களில் தொடர் சொற்பொழிவாற்றி இன்று "சமூகசோதி" என்ற பட்டம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்படும் சமய, சமூக கல்வித் தொண்டர்



## திரு. கா. கணேசதாசன்

[ஓய்வு பெற்ற அதிபர்]

அவர்களுக்கு எமது நல்லாசிகள்

வாழ்த்துவோர்:

★ பிரம்ம ஸ்ரீ சோ. லோகேஸ்வர சர்மா (கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய பிரதம குரு)

★ திரு. ந. பாலவிநாயகர்
★ திரு. ஜெ. முத்துக்குமாரசாமி (இலங்கை வங்கி)
★ திரு. பா. தயாளன்
★ திரு. ப. கண்ணதாசன்
★ திரு. இ. கணேஸ்வரன்
★ திரு. சி. சிவலிங்கம்
★ திரு. இ. சிவபாலகிருஷ்ணன்
★ சஞ்சுதன் மருந்தகம் (பாண்டியன் தாழ்வு)
★ திரு. பா. நந்தகுமார்

(ஏ- 5023)

நல்லூர் இளநூலகம்



### மணிவாக்கு

இலட்சியத்தைச் சாதிப்பதில் சிரமங்கள் இருக்கலாம். அந்தச் சிரமம் எதில் இருக்கிறதோ அதைச் சாதிப்பது தான் உண்மையான சாதனையாகும்.

— ராஜாஜி

## நமது நோக்கு

### உண்மை வெளிவருகிறது

அரசின் பிரச்சார நடவடிக்கையின் காரணமாக ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் தூதுக் குழு தங்கள் நாட்டில் இங்கிருந்து இடம்பெயர்ந்து வாழும் இலங்கையரைத் திருப்பி அனுப்பும் விடயத்தை ஆராய வந்ததமையை ஜேர்மன் அரசு சிறிலங்காவுக்கு இராணுவ உதவி கொடுப்பது பற்றி ஆராய வந்ததாக திரிபுபடுத்திக் கூறப்பட்டது.

ஜேர்மன் தூதுக் குழுவினர் இங்கு வந்ததும் அவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. அவர்கள் இங்கு மனித உரிமை மீறல்களை சிறிலங்கா இராணுவம் செய்துவருவதைக் குறிப்பிட்டுள்ளார்கள். தரைக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளனவா என்று சோதனை செய்ய தமிழ்ப் பெண்கள், சிறுவர்கள் உபயோகிக்கப்படுகிறார்கள் என்று தெரிய வருவதாகவும், இவ்வித செயல்களை இந்திய இராணுவம் தமிழீழத்தில் இருந்தபோது அனுசரித்தது என்பதையும் சுட்டிக்காட்டிய தூதுக்குழுவினர் இத்தகைய செயல்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்றும் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்

அவர்கள் மேலும் ஜேர்மனி சிறிலங்கா அரசுக்கு இராணுவ உதவி வழங்கப் போவதாக பத்திரிகைகளில் பிரசாரப்படுத்தியது சுத்தப் பொய் என்றும், தங்கள் நாடு நேட்டோ நாடுகள், அவுஸ்திரேலியா நியூசிலாந்து போன்ற நாடுகளைத் தவிர வேறு எந்த நாடுகளுடனும் இராணுவ ஒத்துழைப்பில் ஈடுபட்டதாக சரித்திரமே கிடையாது என்று அறுத்துறுத்திக் கூறியுள்ளனர்.

இவைகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளக்கூடியதென்னவென்றால் லக்ஷ்மன் கதிர்காமர் எவ்வளவுதூரம் தனது ஆங்கில நாச்சாதூரியத்தால் வெளிநாட்டவருக்கு சிறிலங்காவின் போர் வெறித்தன்மையை மறைத்து விடுதலைப்புலிகள் மீது பழியைச் சுமத்திப் பிரசாரம் செய்தாலும் . உண்மை விரைவில் வெளிவந்தே ஆகும் என்பதாகும்.

இலங்கையில் நடைபெறும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படாவிட்டால் இலங்கையை உலக நாடுகள் மறக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஜேர்மன் நாட்டுத் தூதுக் குழுவினர் கூறியுள்ளனர். சமாதானம் ஏற்படாவிட்டால் சிறிலங்கா பொருளாதாரச் சீரழிவுக்கு உள்ளாகும். உலக நாடுகள் எவ்வளவு கடனைக்கொடுத்தாலும் அதைச் சிறிலங்கா அரசு யுத்தத்துக்கு செலவு செய்யவேண்டியிருப்பதால் நாட்டபிவிருத்தி ஏற்படாது. அந்நிலையில் உலக நாடுகள் சிறிலங்காவை மெதுவாகக் கைகழுவிவிடும்நிலை ஏற்படும். இதைத்தான் ஜேர்மன் தூதுக்குழுவினர் நாசூக்காகக் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு நல்ல பாடம் கற்பித்து அவர்களைச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவோம் என்று சந்திரிகாவும் கதிர்காமரும் வீராவேசம் பேசுகிறார்கள். தளநிலை, அரசியல் யதார்த்தத்தை அறியாத வெளிநாட்டவரை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உண்மை வெளிவரத் தொடங்கியதும் இருவரும் வழிக்கு வருவார்கள்.

### புலிகளிடம் விமானப் படை

# வான்பரப்பிலும் எதிர்காலத்தில் பெரும் யுத்தங்கள் மூளலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும் விமானப்படையணியை உருவாக்கியுள்ளதால் இனி வான் பரப்பிலும் கடும் மோதல்கள் ஏற்படும் சூழ்நிலை தோன்றியுள்ளதாக இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; வடபகுதி வான் பரப்பில் இனந்தெரியாத விமானங்களின் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளது. 1991காலப் பகுதியில் விமானப் படையினர் உயர் தொழிநுட்பம் மிக்க எவ்-5, எவ்-7 சுப்பசொனிக் விமானங்கள் கொள்முதல் செய்யப்பட்டன

இவை அந்நிய விமான ஊடுருவித் தடுக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ள அதேவேளை வடபகுதியில் யுத்த முனையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகளையும் வீச பயன்படுகின்றது. இந்நிலையில் புலிகளின் விமானப்படையும் யுத்த முனைக்கு வந்துள்ளது:

இதனால் எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கு மற்றும் நாட்டின் சகல பகுதிகளிலும் வான் பரப்பில் விமான யுத்தங்கள் கூட நடக்கும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளது இதனால் பாதுகாப்பு அமைச்சுஇலங்கை விமானப்படையின் வான் பரப்பை பாதுகாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

சி

# வெளிநாடுகளிலிருந்து புலிகள் நவீன விமானங்களை வாங்கலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வெளிநாடுகளிலிருந்து நவீனரக விமானங்களை கொள்வனவு செய்யும் சாத்தியம் இருப்பதாக புலனாய்வுத்துறை வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

புலிகளிடம் தற்போது இருப்பதாகக் கருதப்படும் விமானங்களை விட அவை நவீனமானவையாக இருக்குமெனவும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் விமான ஓடுதளம் இரணமடுவில் நீண்ட காலத்திற்கு முன்பே அடையாளம் காணபபட்டுள்ளது. இப்பகுதியை குண்டு வீசித் தாக்குமாறு விமானப்படை கேட்கப்பட்டது. எனினும் இலக்கில்லாத பரவலான தாக்குதல் நடாத்தக் கூடிய திறமை விமானப்படையினரிடம் இருக்கவில்லை. விமான ஓடுதளத்தை அழிக்க அதிசிறந்த குண்டு வீச்சு தாக்குதல் நுட்பம் தேவை அதுவும் விமானப்படையினரிடம் இல்லை.

இதற்கிடையில் இலங்கை இந்திய விமானப் போக்குவரத்துகட்டுப்பாட்டாளர்கள், இலங்கை வான் பரப்பினுள் இனந்தெரியாத விமானங்களின் ஊடுருவல்கள் இருப்பதாகவும் இதற்கு மேலதிக பாதுகாப்பு கண்காணிப்பு தேவை எனவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

# கொழும்பு வரும் ரயில்களிலிருந்து தினமும் பெருமளவு தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்புக் கோட்டைக்கு தினமும் வந்து சேரும் ரயில்களிலிருந்து நூற்றுக்கணக்கில் தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருவதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது

தற்போது கொழும்பில் 25,000ற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தங்கியுள்ளனர். இதைவிட நூற்றுக்கணக்கான தமிழர் அங்கு தொழில் மற்றும் தேவைகளுக்காக தங்கியுள்ளனர்.

இவர்கள் அருகிலுள்ள பொலிஸ்நிலையங்களில் தம்மை பதிவு செய்துள்ளனர். எனினும் இவர்களும் படையினரின் தேடுதலிலிருந்து தப்புவதில்லை. பலர் பல தடவைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் பலர் விரக்தியடைந்துள்ளனர்.

புலிகளைக் காரணம் காட்டி தினமும் நூற்றுக்கணக்கில் தமிழர் கைது செய்யப்படுகிறார்கள். இது மனித உரிமை அமைப்புக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது. இதனால் அரசுக்கு பெரும் நெருக்கடிகளும் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சி

# 'விஜே' குறித்து பிழையான தகவல்; சந்திரிகாவுக்கு ஐ.தே.க. எம்.பி. சவால்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜய குமாரதுங்க, கொல்லப்படுவதற்கு 10 நாட்களுக்கு முன், ஜனாதிபதி வேட்பாளராக அவரது கட்சியால் அவர் தெரிவு செய்யப்பட்டதாக, திருமதி சந்திரிகா நிருபிப்பாரேயானால் தான் நாடாளுமன்ற பதவியிலிருந்து விலகத்தயாரென ஐ. தே. க. எம் பி சரத் கொங்கஹே ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சவால் விடுத்துள்ளார்;

இது பற்றி அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நானும் சிறிலங்கா மக்கள் கட்சியின் மத்தியகுழுவின் அங்கத்தவனாக இருந்தேன். விஜய குமாரதுங்கவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யும் நோக்கம் இருந்தது. ஆனால் அவரை தெரிவுசெய்யவில்லை.

திரு. பிரேமதாசா தான் தன் கணவர் கொலையாவதற்கு பொறுப்பு என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. சர்வ அதிகாரமுள்ள ஜனாதிபதியை அரசியலமைப்பு சட்டப்படி நீதிமன்றுக்கு அழைக்கமுடியாதென்ற 'சரத்தை' பயன்படுத்தி ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறான கருத்தைத் தெரிவிக்கிறார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில், தான் பதவிக்கு வந்தால் ஜனாதிபதியின் அதிகாரங்களை பயன்படுத்த மாட்டேனென்று கூறிய சந்திரிகா, தற்போது அதனை பயன்படுத்திவருகிறார். சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதிமுறைமையை ஒழிக்கும் எண்ணம் இல்லையென்பதையே இதுபுலப்படுத்துகிறது என்றும் தெரிவித்தார்.

கே-சி

# ஐ. தே. க. எம். பி. தாக்கப்பட்டார்

(கொழும்பு)

ஐ. தே. க. வன் தேசியப் பட்டியல் நாடாளுமன்றஉறுப்பினரும், தற்போதைய சிறிலங்கா மகாஜன கட்சியின்தலைவருமான சரத் கோன்கஹேயும் அவருடன் சென்ற மற்றும் 4 பேரும் கடந்த வியாழன்பொல் ஹேன்கொடையில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர்.

பொல்ஹேன்கொடைவிலுள்ள விஜயகுமாரதுங்கவின் சிலையருகே 50 பேர் கொண்ட குழுவினர் இவர்களை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது காரின் யன்னல்கள் உடைத்து நொருக்கப்பட்டதோடு சாரதியும் தாக்கப்பட்டார்.

அரச பாதுகாப்பு குழுவினரே இவர்களை தாக்கியதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே-சி

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இ. கிருஷ்ணகுமாரின் 'களிமண் பதிவுகள் முதல் கணனிப் பதிவுகள் வரை' என்னும் நூல்வெளியீடு நாளை புதன் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நூலகவியல் தகவல் சேகரிப்பு ஊடகங்களின் வளர்ச்சிப்போக்கு என்னும் தமிழிற்குப் புத்தம்புது விடயத்தைப் பற்றி இந்நூல் விபரிக்கிறது. பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் வெளியீட்டு வைபவத்தில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நூல்பற்றிய அறிமுகவுரையை வழங்கவுள்ளனர்.

## இராசி பலன்

21-06-1995

புதன்கிழமை

[தமிழுக்கு ஆனி—07]

நவமி முன்னிரவு 9.27 வரை, உத்தரட்டாதி சித்தம் மாலை 7-52 வரை இராகு காலம் காலை 11-54 முதல் 1-24 வரை; சுபவேளை மாலை 4-24 முதல் 5-54 வரை.

மேஷம்: பெற்றோர்கோபம், மனவேதனை, அலைச்சல்.

இடபம்: தொழில் லாபம், வெளியூர் தகவல், மன மகிழ்ச்சி.

மிதுனம்: சுபகாரியம், குடும்பசுகம், பயனுள்ள பயணம்.

கடகம்: முட்டுக்கட்டை, சகோதரர் பகை, யோசனை.

சிங்கம்: ஏமாற்றம், தொழில்பகை. பணக்கஷ்டம்.

கன்னி: குடும்பசெலவு, உறவினர் மேன்மை, தெய்வ தரிசனம்.

துலாம்: கடும் உழைப்பு, செல்வந்தர்நட்பு, தற்பெருமை.

விருச்சிகம்: பொதுஜன விரோதம், வாக்குப் பகை, மனச்சுமை.

தனுசு; தகாதசெயல், சபல புத்தி, பெண் விரோதம்

மகரம்: சமூகப்பணி, நிலை மாற்றம், காரியசித்தி.

கும்பம்: குதர்க்க வாதம். தொழில் வெறுப்பு' உடல் உபாதை.

மீனம்; சுயவர் நட்பு, அதிகாரிகள் வெறுப்பு, கடன்படல்.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### இள வயதினிலே...!

இள வயதிலேயே மருத்துவப் பட்டம் பெற்ற சிறுவன் பற்றிய செய்தி சில நாட்களுக்கு முன் வந்தது.

சில ஆண்டுகளிற்கு முன்... தமிழகத்தின் ஈரோட்டில்... சி. கே. கனிஷ் நடராசன் பற்றிய ஓர் செய்தியும் வந்தது. 1986 — 96 வரையிலான பத்தாண்டு காலத்தில் எந்தத் திகதியைச் சொன்னாலும் அதற்கான கிழமையைச் சொல்வானும். அப்போது அவன் வயது... ஆக ஐந்தேதான்!

இப்படி ... இளவயதில் ... அபூர்வ சாதனைகளைச் செய்பவர்களது மூளைத்திறனுக்கு உரிய காரணம் என்னவாயிருக்கும்...? முற்பிறவிப் பயனா ?

சைவ நாயன்மார்களில் ஒருவரான சம்பந்தர் மூன்று வயதிலேயே தேவாரம் பாடினார்... சந்தேகிக்கக் காரணம் இல்லையல்லவா ?

— மயூரன்

# வெளிநாடுகளில் ஈழத் தமிழரின் பிரசாரத்தால் இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடி

(லண்டன்)

வெளிநாடுகளில் உள்ள ஈழத்தமிழர்கள் இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொண்டு வரும் தீவிர பிரசாரங்கள் அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளில் இறங்கியுள்ளதுடன் அந்தந்த நாட்டு மொழிகளில் இலங்கையில் தமிழருக்கு எதிராக காலா காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் அட்டூழியங்கள் பற்றி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

அண்மையில் லண்டன் மாநகரில் தமிழ்மக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பிரிட்டிஷ் மக்களிடையே தமிழ் மக்களுக்கு அனுதாபத்தை ஏற்படுத்தியுள்ளது. பேரணியின் பின்னர் நடைபெற்ற கூட்டங்களிலும் பிரிட்டிஷ் எம் பிக்கள் உட்பட பல பிரிட்டிஷ் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்களும் உரையாற்றியுள்ளனர்.

அமெரிக்காவில் வாஷிங்டனில் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர் வெள்ளை மாளிகை முன்னுல் ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தியுள்ளனர், இப் பேரணி அமெரிக்க மக்களை கவர்ந்துள்ளதாகவும் பேரணியின் பின் நடைபெற்ற கூட்டத்தில் வெள்ளைமாளிகை அதிகாரிகள், அரச, தனியார் நிறுவன அதிகாரிகள் உட்பட நூற்றுக்கணக்கான அமெரிக்க பிரஜைகளும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலும் இதுபோன்ற பேரணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றுக்கு அந்நாட்டுப் பத்திரிகைகளும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இப்பேரணிகளால் அரசுக்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டு வருவதுடன் இதற்கு எதிர்ப்பிரசாரம் செய்யவேண்டிய இக்கட்டான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது இது பற்றி அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும், எனினும் அரசின் எதிர்ப்பிரசாரம் சாதகமான பலனை அளிக்கமாட்டாதெனவும் கூறப்படுகிறது. -சி

# வெளிநாட்டு ராணுவ உதவியை ஒருபோதும் நாடமாட்டோம்

## — பிரிகேடியர் சரத்முனசிங்க

(கொழும்பு)

வெளிநாட்டு இராணுவத்தினரின் உதவியை இலங்கைப் படையினர் விரும்பவில்லை என்பதை திட்டவட்டமாக கூறுவேன. என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க சண்டே ரைம்ஸ்க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்: எம்மிடம் போதியளவு ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ இல்லை. வெளிநாடுகளிலிருந்து இவற்றைபெற முயலுவோம் வெளிநாட்டு இராணுவத்தினரின் உதவியைநாடமாட்டோம் உலகநாடுகளில் கெரில்லா போர் முறையில் நாம் சிறந்த வீரர்களைக் கொண்டுள்ளோம்.

வடக்கில் விடுதலைப் புலிகளால்படையினர் சுற்றி வளைக்கப்பட்டு முகாம்களில் முடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவதில் உண்மையில்லை. அங்குள்ள படைமுகாம்களில்உணவும் மற்றும் பொருட்களும் போதிய அளவுஉள்ளது நாம் நல்ல பலமான நிலையிலேயே அங்கு உள்ளோம்.

தரைப்படை நடவடிக்கையில் எமது இராணுவத்தினர் நலல பரிச்சயம்பெறறுள்ளனர் அவர்களிடம்நவீன ரகஆயுதங்தங்கள் இல்லாதபோதும்கெரில்லா சண்டை அனுபவம்நிறைய உள்ளதுஎனவும்கூறினுர். -சி

## படை முகாம்களுக்கு

# மைக்ரே-லைற் விமானத்தின் படங்கள் விநியோகம்

(கொழும்பு)

மைக்ரோ லைற் ரக விமானத்தின் படமும், அது இயங்கும் பொறிமுறை குறித்தும் படங்கள் நாடு முழுவதிலுமுள்ள பாதுகாப்பு அமைப்புகளிடமும் படை முகாம்களிற்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மைக்ரோலைற் ரக விமானம் மூலம் நாடு முழுவதிலும் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிப்பதால் படையினருக்கும், பாதுகாப்பு வட்டாரங்களுக்கு மைக்ரே-லைற் ரக விமானததைத் தெரியாதாம்.

இதனுல் அந்த ரக விமானத்தின் படங்கள் அச்சிடப்பட்டு அதனுடன் அந்த விமானம் இயஙகும் பொறிமுறை குறித்தும் விளக்கப்பட்ட தஸ்தாவேஜுகளும் சகல பகுதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை புலிகள் மைக்ரே-லைற் ரக விமானம் மூலமா? அல்லது அதைவிட பெரிய விமானம் மூலமா? அல்லது இவை இரண்டின் மூலமுமா தாக்குதலை நடத்துவார்கள் என்பது பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பாதுகாப்பு செய்தியாளர் கூறியுள்ளார். -சி

## கிழக்கில் படையினர்

# புதிதாக முகாம் அமைப்பதை புலிகள் தடுத்து வருகின்றனர்

(கொழும்பு)

கிழக்கில் படையினர் புதிய முகாம்களை அமைப்பதை விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடாத்தி தடுத்து வருவதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

கிழக்கில் சிறிய முகாம்களை மூடி பெரிய முகாம்கள் அமைககும் முயற்சியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் கடந்தவாரம் பெண்டுகள் சேனைப் பகுதியில் முகாம் அமைக்க படையினர் இரண்டாவது தடவையாக மேற்கொண்ட முயற்சியையும் புலிகள் முறியடித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் தாக்குதல் படைப் பிரிவொன்றை அமைக்க படையினர் முயற்சித்தனர்- அங்கு புலிகள் கடும் மோட்டார் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதனுல் 18ற்கும் மேறபட்ட படையினர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர்: இதையடுத்து முகாம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

தற்போதைய நிலையில் கிழக்கில் புலிகளின் அதிகரித்துவரும் தாக்குதல்களில் படையினர் பலவேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. சி

# ஊர்காவல் படைக்கு 15,000 பேர் திரட்டப்படுவர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பிற்காக 15.000 ஊர்காவல படையினர் விரைவில் திரட்டப்படவுள்ளதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு தீவிர பயிற்சியும் வழங்கப்படும். இதன்பின் இவர்கள் கண்காணிப்புக்குழுக்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக பொலிஸ் துறைறளிற்கும் ஆட்கள் திரட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி-கி

## கடற்படை கப்பல் விவகாரம்

# இராணுவம் - கடற்படையினரிடையே முறுகல் நிலை உருவாகிறது

[கொழும்பு]

கடற்படையினருககு கடந்த வாரம் பல தரையிறங்கும கப்பல்கள் சிங்கப்பூரிலிருநது வந்து சேர்ந்துள்ளன. வடக்கில் கடற்படையினரின் பலத்தை அதிகரிக்கச் செய்வதற்காகவே இந்தக் கப்பல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல்கள் இராணுவத்தினரின் தேவைக்கும் பயன்படுத்தப்படவுள்ளன. வடக்கில் விடுதலைப் புலிகளால் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதால் கடற்படையினரின் உதவி இல்லாமல் இவர்களுக்கு விநியோக தொடர்பை ஏற்படுத்த இராணுவம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகளால் இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதன் பின் கடற்படையினரின் தரையிறங்கும் கப்பல்கள் மட்டுமே வடபகுதி படைமுகாம்களுக்கான விநியோகத்தை கவனித்து வருகின்றன.

படையினருக்கான சகல விநியோகங்களையும் வழங்குவதுடன் வடபகுதி முகாம்களிலிருந்து லீவில் செல்லும் படையினரை கொண்டு செல்வதும் புதிய வீரர்களைக் கொண்டுவருவதும் கடற்படையினரின் வேலையே. இவை அனைத்தையும் மேற்கொள்ளும் நிலையில் கடற்படையினரிடம் தரையிறங்கு கப்பல்கள் இல்லை. இவை 100 தொன் நிறையுடைய பாரத்தை ஏற்றக்கூடியன.

இவ்வாருன பணிகளில் கடற்படையினரின் தரையிறங்கு கப்பல்களை ஈடுபடுத்துவதற்கு கடற்படை அதிகாரிகள் விரும்பாத நிலையில் உள்ளதால் இதுகுறித்து இராணுவ உயர் அதிகாரிகள் பலர் அதிருப்தியடைந்துள்ளனர்.

இந்நிலையில் தரையிறங்கு கப்பல்களை தமக்கென தனியே கொள்வனவு செய்ய இராணுவத்தினர் தீர்மானித்துள்ளனர். சி

# ஐ.தே.க. விஞல் நீக்கப்பட்ட படையினர் மீண்டும் சேவை

(கொழும்பு)

1977-ம் ஆண்டு அரசியல் பழிவாங்கல்களிஞல் பதவியிலிருந்து அகற்றப்பட்ட பல படையினரை, புதிய அரசாங்கம் மீண்டும் சேவையில் சேர்த்து, அவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கியுள்ளது என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்கள் சேவையிலிருந்த காலத்தில் யுத்தத்துக்கு முகம் கொடுக்க பயந்ததினுல் அப்போதுசேவையிலிருந்து அகற்றப்பட்டார்களாம்,

சிங்க ரெஜிமன்டை சேர்ந்த முன்னுள் ஆணையிடும் அதிகாரி லெப்டினன்ற் கேணல் பிரசன்ன தசநாயக்கா, மலவிகேதாகின சேன பெர்ஞண்டோ, மேஜர் வோல்டர் ரணவக, கப்டன் வி. டி. லங்காதிலக, ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்களில் சிலர் என்றும் 'ஹிரு' மேலும் தெரிவித்தது. -ம-கி

# வன்னியில் வயிற்ருேட்டம் ஐவர் மரணம்

(கொழும்பு)

வவுனியாவில் கிராமங்களில் வெகுவேகமாக பரவிவரும் வயிற்ருேட்ட நோயினுல் ஐந்திற்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளனர்.

வயிற்ருேட்டத்தினுல் ஒலுமடு, பட்டிக்குடியிருப்பு மற்றும் சில கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியை விட்டு பெருமளவுமக்கள் வெளியேறி வருகின்றனர்.

வெகுவேகமாக பரவிவரும் வயிற்ருேட்ட நோயினுல் சிறுவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவு சிறுவர்கள் தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -சி

# விவாகரத்து செய்யும் முடிவை சாள்ஸ் - டயாஞ கைவிட்டனர்

(லண்டன்)

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் சர்ச்சைக்குரிய சாள்ஸ்-டயாஞ தம்பதியினர் தாம் விவாகரத்துச் செய்வதில்லை என முடிவெடுத்திருப்பதாக லண்டன் பத்திரிகைகள் தெரிவித்திருக்கின்றன.

இவ் அரச தம்பதியினர் கடந்த சில வருடங்களாக பிரிவு நிலையில் இருந்து வருக்கின்றனர். இவர்கள் பிரிந்து வாழ்கிருர்களே, தவிர இன்னும் விவாகரத்துச் செய்து கொள்ளவில்லை; இப்போது விவாகரத்துச் செய்யும் முடிவை அவர்கள் கைவிட்டுவிட்டுவிட்டார்கள்.

இதன்படி அடுத்த முடிக்குரிய இளவரசராக சாள்ஸ் வரும்போது டயாஞ மகாராணியாக முடிசூட்டப்படுவார். கி-சி

# தெய்வீகப் பேருரை

(அரியாலை)

நல்லூர் ஸ்ரீராஜராஜேஸ்வரி ஆலயத்தில் கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமான அலங்காரத் திருவிழாவில்தொடர்ந்துதெய்வீகப்பேருரையை காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் தமிழருவி த. சிவகுமாரன் ஆற்றி வருகிருர். -59

# போரைத் தொடர்வதா? பொருளாதாரத்தை இழப்பதா? அரசின் முடிவிலேயே நாட்டின் எதிர்காலம்

(கொழும்பு)

அரசாங்கம் தற்போது போருக்கு தயாராகி, நிதி அமைச்சரும் அதற்கேற்றாற்போல் எஞ்சிய வருடத்திற்கு போருக்குத் தேவையான நிதியை சேர்ப்பதற்காக சில நடைமுறைகளை அறிவித்துள்ளார்.

நிதியமைச்சர் தனது பெப்ரவரி வரவு-செலவுத் திட்டத்தில், பாதுகாப்பு செலவை குறைத்திருந்தார். ஆனால் எதிர்பார்த்த சமாதானம் கிட்டவில்லை. அதனால் நிதியமைச்சர் எஞ்சிய இந்த வருடத்திற்கு 4500 கோடி ரூபாவைத் தேடவேண்டியுள்ளது.

இவ்வாறு 'சண்டே ஐலண்ட்'டில் வெளியான பொருளாதார நிபுணரின் கட்டுரையிற் தெரிவிக்கப்பட்டுள்ளது அக்கட்டுரை மேலும் தெரிவிக்கையில்;

அரசு இதனை மூன்று வழிகளில் பெறவுள்ளது. பாதுகாப்பு நிதிக்கான வரி ஒரு வீதம் அதிகரிப்பு- இதனால் 1900 கோடி ரூபா பெறப்படும். மக்கள் மயமாக்கல் திட்டம் ஆயிரம் கோடி ரூபா கொண்டும், மின்சார சபை லாபத்திலிருந்து 1500 கோடி ரூபா பெறப்படும். மூலதனத்தை விடுவதனை குறைத்து 10 ஆடம்பர பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்படும்.

நிதியமைச்சர் பாணுக்கும் உரத்துக்கும் கொடுக்கும் மானியம் அப்படியே இருப்பதனையிட்டு மகிழ்வுறுகிறார். போருக்கான பொருளாதார கொள்கை இந்தவருடத்துடன் முடியப்போவதில்லை. இது 3ம் ஈழப்போரில் ஆரம்பமானதினால் அமைச்சர் இன்னும் சில வருடங்களுக்கு பல சிக்கன நடவடிக்கைகளை எடுக்க வேண்டி நேரிடும். மிதமான சிந்தனையை தவிர்த்து அரசியல் நன்மையை கருத்திலெடுப்பது அவசியம்.

வெளிநாட்டுக் கடன் 1994ம் ஆண்டு 434 ஆயிரம் கோடி ரூபாவாக இருந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் உயர்ச்சியடைந்து 14 வீதமாக இருந்தது. வட்டி வீதம் அதிகரித்தது. கடன் வழங்குவோரின் வட்டி வீதமும் அதிகரிக்கப்படவுள்ளது, பணப் பெறுமதியும் குறைந்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியும் 6.9 வீதத்தில் இருந்து 56 ஆக குறைந்துள்ளது.

விவசாய உற்பத்தி கடந்த வருடம் 33 வீதத்தினாலும் தொழிற்சாலை உற்பத்தி 91 வீதத்தினாலும் குறைந்தது. ஒவ்வொரு பகுதியிலும் வளர்ச்சி குன்றியிருந்தது. ஏற்றுமதி வருவாய் 9 வீதம் உயர்ந்தபோதும் இறக்குமதி 16 வீதத்தினால் அதிகரித்தது. இதனால் ஏற்றுமதி இறக்குமதி சமநிலை பாதிப்படைந்தது.

கடந்த காலப் பொருளாதாரத் தவறுகளினால் எங்கள் பொருளாதாரம் பாதிப்படைந்தது. அரசாங்கம் பெருந்தொகையான நிதியை வெளிநாடுகளிலிருந்து கடனாகப் பெற்று இலவச சுகாதாரம், இலவசக் கல்வி, உணவு மானியம், போக்குவரத்து மானியம், உரமானியம், நட்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களுக்கு நிதிஉதவிகள் வழங்கியது. இவற்றைத் தொடரவேண்டுமென்றால் இன்னும் கடன் தான் பெற வேண்டும். மனித அபிவிருத்திக்கு இவை நன்றாய் இருந்தபோதும் பொருளாதார வளர்ச்சியைக் கூட்டவோ, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவோ இல்லை. போருக்கு நிதி சேகரிக்கவேண்டியிருப்பதனால் தொடர்ந்தும் இவற்றை கடைப்பிடிக்க இந்த அரசாங்கத்தால் முடியுமா? போரையும் சமூகநலத் திட்டத்தையும் ஒரே நேரத்தில் தாங்கிக்கொள்ள முடியாது என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

ஏதோ ஒன்றைக் கைவிட வேண்டும். பஸ் வண்டியில் அதிக பயணிகள் போல் எங்கள் சுகாதாரமும் கல்வியும் மிதமிஞ்சி விட்டது. போருக்கு ஆயுத தளபாடம், சீருடைகள் ஏனையவற்றிலும் பார்க்க சண்டைக்குச் செலவிடும் செலவு அதிகமாக உள்ளது. போரினால் அகதிகள் உருவாக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டியுள்ளது. இன்னும் அரச சொத்துக்களுக்கு நாசமும் ஏற்படுகிறது.

போர், உற்பத்தியை பாதிக்கிறது. விவசாயிகள் குண்டு வெடிப்புகள், கண்ணிவெடிகளுக்கு பயந்து தமது விவசாய நிலங்களுக்கு போகமுடியாதுள்ளது. இதுவரை போரால் ஏற்படும் செலவை அரசாங்கம் சரியாக மதிப்பிட்டு வெளியிடவில்லை.

போருக்கு ஆயுத தளபாடங்களை இறக்குமதி செய்வதற்காக உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வது தவிர்க்க வேண்டிவரும். அதாவது பொருளாதார நிபுணரின் கருத்துப்படி சொல்வதானால் நாங்கள் வெண்ணெய்யை பெற்றுக்கொள்வதா? அல்லது துப்பாக்கியைப் பெற்றுக் கொள்வதா? ஒன்றை தெரிவு செய்யவேண்டும். இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யாவிட்டால் பணவீக்கம் ஏற்படுவதோடு பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படும். வியட்நாமில் அமெரிக்கா சமூகநலத் திட்டங்களையும் கைக்கொண்டு யுத்தமும் செய்ததினால் அதன் பொருளாதாரம் பாதிப்புற்றது.

போர்ப் பொருளாதாரம் என்பது திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும். நல்ல நிலை நிலவியகாலத்தில் செலவு செய்வது போல் றேட்டுக்கள் அரங்குகள் இன்னும் அரசியல்வாதிகளின் பெயர் துலங்க வைக்கும் செலவுகளை குறைக்க வேண்டும். மக்கள் வருவாயிலிருந்து சுகபோகம் அனுபவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், ஜனாதிபதி ஆகியோரிலிருந்தே சிக்கனம் ஆரம்பிக்கப்பட வேண்டும். உல்லாசப் போக்குக்கு அரச வாகனங்களைப் பயன்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டும். அரசியல்வாதிகளின் வெளிநாட்டு சுகபோக பயணங்கள் நிறுத்தப்பட வேண்டும். முதலில் அரசியல் வாதிகள் தியாகம் செய்யாமல் பொது மக்களைக் கேட்க முடியாது.

அரசாங்கம் சமூகநலத்திட்டங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்: வைத்தியசாலைகள், பாடசாலைகள் இவைகளுக்கு வழங்கும் அரசநிதி, உதவிகள் பற்றி மீள்பரிசீலனை செய்ய வேண்டும். அரசியல்வாதிகள் மற்றும் செல்வந்தர்களுடைய சுகவாழ்வுகள் குறைக்கப்படவேண்டும் ஒரு பெரிய தேசிய நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு மாகாண சபைகளையும் ...வைத்துக் கொள்ளத்தான் வேண்டுமா? மாகாண சபைகள் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு உதவவே கொண்டுவரப்பட்டன. ஆனால் நாட்டின் ஏனைய பகுதிக்கு அவை தேவையில்லை. அதற்கு உள்ளூராட்சி சபைகளே போதும். அதிகாரப் பரவல் பற்றி தமிழர்களும் முஸ்லிம்களும் கேட்பது நியாயமே.

அவர்கள் அந்தந்தப் பிரதேசத்தில் வருமானத்தை ஈட்டிக்கொள்ள கேட்கப்பட வேண்டும். அதிகாரப் பரவலை கேட்கின்றவர்களே அதன் செலவையும் ஏற்க வேண்டும்.

அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து குறைந்தவட்டியுடன் வெளிநாட்டுப்பணத்தை பெற முடியும். ஆனால் அவைகள் உற்பத்திக்கு முதலிடமே ஒழிய போருக்கும், சமூக நலத் தேவைத் திட்டங்களுக்கும் செலவிடக்கூடாது. கே ர சி

## ஜனாதிபதி ஆட்சி நீடிப்புக்கு ஸ்ரீமா கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஆட்சி முறையை மேலும் சில காலங்களுக்கு நீடிப்பதென்று அரசு எடுத்துள்ள முடிவுக்கு, பிரதமர் திருமதி. ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை எதிர்வரும் ஜூலை மாதம் 15ம் திகதிக்கு முன்பு ஒழிக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா முன்னர் அறிவித்திருந்தபோதிலும், நாட்டின் தற்போதைய நிலைமையை காரணம்காட்டி, ஜனாதிபதி ஆட்சி முறையை நீடிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான முன் ஏற்பாடுகளை நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேற்கொண்டு வருகின்ற போதிலும், அரசின் இந்த நடவடிக்கைகளை. பிரதமர் ஸ்ரீமாவோ எதிர்த்து வருவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. வி- கி

## சுப்பசொனிக் நோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியை நேற்று முன்தினம் 'சுப்பசொனிக்' மிக்விமானங்கள் நோட்டம் விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடல் பகுதியால் வந்த இந்த சுப்பசொனிக் விமானங்கள் முல்லைத்தீவுப் பகுதியை சுற்றி நோட்டமிட்டதன் பின்னர் தாக்குதல் எதனையும் நடாத்தாமல் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கி-சி

## தமிழறிஞர் மூவருக்கு பட்டமளித்து கௌரவிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய ''வைரவிழா'' அண்மையில் நடைபெற்றபோது மூன்று பெரும் தமிழறிஞர்கள் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கி, பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் முதலாவது அதிபராகக் கடமையாற்றிய கி. துரைசுவாமி அவர்களுக்கு ''சிவஞானசாகரம்'' என்னும் பட்டமும ஆசிரியர்களாகக் கடமையாற்றிய ச. வேலுப்பிள்ளை அவர்களுக்கு 'ஆசிரியமணி' என்னும் பட்டமும் கி. வைரமுத்து அவர்களுக்கு 'மொழியரசு' என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். 139- கி

## விமான நிலைய வருமானத்தில் நாளாந்தம் 2லட்சம் ரூ. இழப்பு

(கொழும்பு)

குண்டு வெடிப்பு அச்சுறுத்தலையடுத்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அமுலாக்கப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளினால் 'எயர் லங்கா' நிறுவனம் நாளாந்தம் இரண்டு லட்சம் ரூபா வருமான இழப்பை எதிர்நோக்கியுள்ளது.

அண்மையில் அங்கு இடம் பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து விமான நிலையத்திற்குப் பார்வையாளர்களை அனுமதிப்பதில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன அத்துடன் விமான நிலையத்திலிருந்த வாகனத் தரிப்பிடமும் மூடப்பட்டது.

பார்வையாளர்கள் அனுமதியை மட்டுப்படுத்தியதன் மூலம் ஒருவருக்கு நாற்பது ரூபா என்ற அடிப்படையில் தற்போது வருமான இழப்பு ஏற்படுகின்றது.

இதேபோன்றே வாகனத் தரிப்பிடத்திற்கான அறவீட்டு வருமானத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தவகையில் நாளாந்தம் தற்போது இரண்டு லட்சம் ரூபா வருமான இழப்பு ஏற்படுவதாக கணிப்பிடப்பட்டிருக்கின்றது. -கி-சி

## இடைக்கால நிர்வாகம்; தமிழ் குழுக்கள் கருத்து வேறுபாடு

(கொழும்பு)

வடக்குகிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாகம் குறித்து கொழும்பில் தமிழ்க் குழுக்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதாக இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

குறிப்பிட்ட அமைப்பொன்று குறித்த இடைக்கால நிர்வாகத் திட்டத்தை வரவேற்கிறதுஆனால்மற்றொரு தமிழ் அரசியற் கட்சியோ இத்திட்டத்தை முற்றாக நிராகரித்துள்ளது.

இத்தகைய தற்கால நடவடிக்கையின் மூலம் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. இப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று அவசியம் என இவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. கி- சி

## வெளிநாடுகளில் புலிகளுக்கு எதிராக பிரசாரம் 'மேற்கொள்ள அரசு திட்டம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பாரியளவில் பிரச்சாரங்களை முடுக்கிவிடுமாறு அரசு வெளியுறவு அமைச்சகத்தைக் கேட்டுள்ளது.

இதற்கமைய வெளியுறவு அமைச்சக அதிகாரிகளும், வெளிநாடுகளிலுள்ள தூதரக அதிகாரிகள் மற்றும் தூதர்கள் அந்தந்த நாடுகளில் வாழும் சிங்கள புத்திஜீவிகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் மேற்கொண்டுவரும் பிரசாரம் அங்கு நல்ல பலனை அளித்து வருவதாகவும் ஐரோப்பிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கில் அகதிகளாக உள்ள தமிழர்கள் இந்த ஊர்வலங்களில் முழு அளவில் கலந்து கொண்டு இலங்கைக்கான சகல உதவிகளையும் நிறுத்துமாறு கோருவதுடன் அந்தந்த நாட்டு மக்களையும் தமது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக திருப்பி வருகிறார்களாம். இது இலங்கைக்கு பலத்த அடியாக உள்ளது.

இந்நிலையில் வெளிநாடுகளில் இலங்கைத் தூதரகங்கள் மேற்கொள்ளும் பிரச்சாரங்கள் எடுபடாமல் போகிறது. சர்வதேச ரீதியில் புலிகளிற்கான அனுதாபத்தை முறியடிக்காவிடில் இலங்கை மிகப் பெரும் பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சி

## சமஷ்டிக்கு சமனான அதிகாரம்; அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியை வடக்குடன் இணைத்து சமஷ்டிக்கு சமமான அதிகாரங்களை வழங்குவது பற்றி அரசாங்கம் கடந்த வாரம் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்துள்ளது. என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல அரசியல் கட்சிகளுடன் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இதுபற்றி கலந்துரையாடியுள்ளாராம்.

அம்பாறை மாவட்டமும், கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் பிரதேசங்களையும் நீக்கியே இந்தப் பிரதேசம் அடங்கும் என்றும் நிலம், பொலிஸ், மொழி போன்ற விடயம் சம்பந்தமாக கட்சிகளுடன் கலந்துரையாடப்பட்டன என்றும் திவயின மேலும் தெரிவித்துள்ளது. ம-சி

# "ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு தமிழனைக் கொல்லவேண்டும்"

## சிங்கள அமைப்பு சுவரொட்டி

[கொழும்பு]

தேசப்பிரேமி சங்விதானய என்ற சிங்கள அமைப்பு, தனது 'ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு தமிழனைக் கொல்ல வேண்டும்' என்று காலியில் சுவரொட்டிகளை ஒட்டியிருந்ததாகக் காலியில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்டு, அகதி முகாம் ஒன்றில் தங்கியிருக்கும் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் திகதிக்கு முன்பாகவே தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்றும் அச்சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரண்டினதும் கீழ்மட்ட உறுப்பினர்கள் இருந்தார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலியில் தமிழர்களுக்கு எதிராக இன விரோதத் தாக்குதலை நடத்தும் நோக்கில், பல நாட்களுக்கு முன்பே திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ரி

# வெளிநாட்டு தூதரகங்களில் புலிகளை எதிர்த்து பிரசாரம் செய்ய அதிகாரிகள் இல்லை

(கொழும்பு)

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் பிரசாரங்களுக்கு எதிராக எதிர்ப் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு, இலங்கைத் தூதரகங்களில் போதிய அதிகாரிகள் இல்லை எனத் தூதரக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் மிகத் தீவிரமாக மேற்கொண்டுவரும் பிரசாரங்கள் இலங்கை அரசுக்கு ஏற்படுத்திவரும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அதிகாரிகளை அனுப்புமாறு சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள தூதரகங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

இந்நிலையில் வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு எதிராகவும், அதனை முறியடிக்கும் நோக்கிலும் பிரசாரங்கள் ஆரம்பமாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சிரி

# ஹபரண, லங்கா முடித்த உணவுப்பொருள்களுடன் வந்தன

(யாழ்ப்பாணம்)

''ஹபரண'' 'லங்கா முடித்த, ஆகிய இரு கப்பல்களும் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு நேற்று முன்தினம் இரவே காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக்கப்பல்கள் இரண்டும் காங்கேசன் துறைமுகத்திலிருந்து பல மைல் தூரத்துக்கு அப்பால் நங்கூரமிட்டு நின்றதாக செய்திகள் தெரிவித்தன

நேற்று காலை இக்கப்பல்கள் இரண்டும் பருத்தித்துறை துறைமுகம் வந்து ஒரே நேரத்தில் பொருட்களை இறக்கும்பணியில் ஈடுபட்டது.

திருகோணமலையில் இருந்து மாவை ஏற்றிக் கொண்டு 'ஹபரண' கப்பலும் கொழும்பில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 'லங்கா முடித்த' கப்பலுமே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பல்களில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை. 170.ரி

# மண்ணை மீட்க மகனை இணைத்த தந்தை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையைச் சேர்ந்தவரும் தற்போது மானிப்பாய் வீதி, 3ம் கட்டை, ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய திரு. க. முருகப்பெருமாள் என்பவர் தமிழீழ மண்மீட்பு போருக்காக தனது மகனை தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணியில் கடந்த 12ம் திகதி அன்று இணைத்துள்ளார். -ரி

# திருமலை கிராமங்களுடன் தொடர்புகள் துண்டிப்பு

(திருமலை)

திருகோணமலையில் சம்பூர், கூனித்தீவு, நவரத்தினபுரம், இலகந்தை போன்ற கிராமங்களின் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்வது தொடக்கம் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வது போன்ற அத்தியாவசியச் சேவைகள் பெரிதும் தடைப்பட்டுள்ளன. ரி

# தலையற்றசடலம் கரை ஒதுங்கியது

(கொழும்பு)

தலையற்ற சடலமொன்று அல்லைப்பிட்டிக்கரையில் ஒதுங்கியுள்ளதாக பாதுகாப்புத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அடையாளம் காணமுடியாதவாறு இச்சடலம் அழுகியிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது கி-ரி

## வடக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரையும் அனுப்பும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனராம்.

வடபகுதியில் தாக்குதல் நடாத்தி வெற்றி பெறுவதைத் தவிரப் படையினருக்கு வேறு வழியே இல்லை என்ற நிலையில் வடக்கு நோக்கிப் படையினரை நகர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நிலையில் மிக விரைவில் வடக்கில் பெரும் மோதல்கள் வெடிக்கும் சாத்தியம் உருவாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சிரி

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

லாம். கைதானவர்களை தடுத்து வைக்கலாம் என்பதால் இப்பகுதி மக்கள் மதியில் வெள்ளைவான் பீதியை ஏற்படுத்திவருகிறது.

இதேவேளை திருமலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நகரத்தின் நுழைவாயிலில் பயணிகள் வெகு நுணுக்கமாக சோதனையிடப்படுகிறார்கள் நகருக்குள்ளேயும் ஒவ்வொரு காவலரணை சோதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். -ரி

# மாகோவில் தபால்களை எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்டத்திற்கு மண்எண்ணை பரல்களை ஏற்றிவரவிருக்கும் 'மாகோ' கப்பலில் தபால் பொதிகள் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசங்க அதிபர் கே. பொன்னம்பலம் வடமாகாண உதவி அஞ்சல் நாயகத்திற்கு நேற்று தெரிவித்துள்ளார்.

## தபால் அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் மாவை இறக்கி கொண்டிருக்கும் 'ஹபரண' கப்பலில் இங்கிருந்து தபால்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய பொதுமக்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்பாக தபால்களை தபால் பெட்டியில் சேர்க்குமாறு கேட்கப்படுகிறார்கள். 170-ரி

வடமாகாண உதவி அஞ்சல் நாயகம் நேற்று யாழ். செயலக தொலைபேசி மூலம் கொழும்பில் தங்கிநிற்கும் யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்ட சமயமே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாத காலமாகியும் தபால்கள் எதுவும் கப்பலில் வந்து சேராமையினால் கொழும்பில் பெருமளவு தபால் பொதிகள் தேங்கிகிடக்கின்றன: 162-170-ரி

# பாதுகாப்பு அமைச்சின் செய்தி பெரும் 'வியப்பை ஏற்படுத்துகிறது

(கொழும்பு)

"இலங்கை விமானப்படையிடம் பீரங்கிகள் பொருத்தப்பட்ட விமானங்கள் எதுவும் கிடையாது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடனான மோதல்களில்'' விமானப்படையினரின் பீரங்கி தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் தகர்த்தப்பட்டன, என பாதுகாப்பு அமைச்சு இதுவரை காலமும் செய்திகளை வெளியிட்டு வந்தது பெரும் வியப்பை தருகின்றது.

இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இப்பத்திரிகை இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: இலங்கை விமானப்படை இதுவரை காலமும் செய்து கொண்ட விமானக்கொள்வனவில் 1991-ம் ஆண்டு செய்து கொண்ட விமானக் கொள்வனவே மிகப் பெரியது இக்கொள்வனவில் எப்-5 எப்-7 விமானங்களை இலங்கை கொள்வனவு செய்தது. இந்த விமானங்களின் மூலமும் பீரங்கித்தாக்குதல் நடாத்த முடியாது. இவை ஊடுருவி வேவுபார்க்கவே முடியும்.

விமானப்படையினரிடம் தற்போது இருக்கும் சியாமா செட்டி விமானங்களினாலும் புக்காரா விமானங்களினாலும் பீரங்கித்தாக்குதல்களை நடாத்த முடியாது. மேற்படி விமானங்கள் அனைத்திலும் உள்ளூரில் தயாரித்த குண்டுகளை

## சண்டே ரைம்ஸ்

பொருத்தியே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தற்போது விமானப் படைக்கு ஏற்பட்டுள்ள கடினமான நிலையை கருத்தில் கொண்டு பீரங்கிகள் பொருத்தப்பட்ட கனரக ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. வி-ரி

## அச்சுவேலிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியசாலை மீண்டும் ஒருபகுதி இயங்க ஆரம்பித்துளளது.

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு நேற்று முதல் வழமைபோல செயல்படத் தொடங்கியுள்ளது. ஏனைய பிரிவுகளும் படிப்படியாக இயங்க தொடங்கும் என வைத்திசாலை வட்டாரத்தில் தெரிவிக்கப் பட்டது:
90-ரி

## ஊர்காவல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

பாதுகாப்புப் படையினர் கிழக்கில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இவ்வகை ஆட்சேர்ப்பு அமைவதாக 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு கிழக்கில் சில பகுதிகள் இலக்காக நேரிடுமென இராணுவத்தினர் அக்கிராமவாசிகளிடம் அச்சம்தெரிவித்த பின் அவர்கள் இவ்வகை ஆட்சேர்ப்பினை மேறகொண்டுள்ளனர். தீ-சி

# ஆனையிறவு பகுதியில் தாக்குதல்

(தாளையடி)

ஆனையிறவு வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களில் இருந்து கடந்த சில நாட்களாக இரவு பகல் வேளைகளில் ஷெல் வீச்சு நடைபெறுகிறது கூடுதலான ஷெல்கள் விரக்கனி ஆற்றுப் பகுதியில் விழுந்து வெடித்தன.

இவ் இராணுவ முகாம்களுக்கிடையிலான இராணுவ வேலிப்பகுதியிலும் இரவு பகல் வேளைகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டவண்ணம் இருந்தது; 163-ரி

## விமான

[1ம் பக்கத்தொடர்ச்சி]

அறிவித்துள்ளது;

கட்டுநாயக்க விமானநிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தியதுடன், பிரயாணப் பொதிகளைப் பரிசோதிப்பதற்காக விசேட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. வெடிமருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு விசேட பயிற்சியளிக்கப்பட்ட மோப்பம் பிடிக்கும் நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விமான மார்க்கமாக அனுப்பப்படும் பொதிகள் விசேட கதிர்ப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

விமானநிலையத்தின் வாகனத் தரிப்பிடம் தற்போது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன், விமானநிலையத்திற்குவரும் வாகனங்களைப் பரிசோதிப்பதற்காகக் கூடுதலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அரசு மேலும் தெரிவித்துள்ளது. விரி

ஸ்ரீதர் 'அகலத் திரையில்

21-06-95 மாலை 6.30 மணிக்காட்சி மட்டும்

கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்

நிதர்சனம்

தயாரித்து வழங்கும்

மோகன் - சகுந்தலா

கஜவதனி, ரட்ணவடிவேல், திலகவதி,

மற்றும் பலர் நடித்த

ஞானரதனின்

முகங்கள்

[சமூகச்சித்திரம் - கலர்]

22-06-95 முதல்

தினசரி: 2-30, 4-30, 6-30

சனி, ஞாயிறு: 10-30, 2-30, 4-30, 6-30

முகங்கள்

(சமூகச் சித்திரம் - கலர்)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 6ம இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.